**செய்தி வெளியீடு எண்: 456** **நாள்: 16.07.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (16.7.2018) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூரில் 22 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், கடலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 137 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 ஆற்றுப்பாலங்கள் மற்றும் 2 இரயில்வே மேம்பாலங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள் அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூரில் 22 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். இப்புதிய இரயில்வே மேம்பாலத்தினால், போத்தனூர், வெள்ளாளூர், மேட்டூர், கோனவாய்க்கால்பாளையம், குறிச்சி மற்றும் செட்டிபாளையம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிகவும் பயனடைவர். இரு வழித்தடமுள்ள இப்பாலம், வடக்கு கோயம்புத்தூர் – போத்தனூர் – செட்டிபாளையம் சாலையில் போக்குவரத்து நெருக்கடியை தீர்க்கும்.

மேலும், கடலூர் மாவட்டம், புவனகிரி அருகே 22 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்; நந்திமங்கலம் – பூலாமேடு கிராமங்களுக்கு இடையே 7 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி எம்.எஸ்.பி கேம்ப் சாலை சந்திப்பில் 74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்தின் மதுரை மற்றும் பேருந்து நிலைய கிளைப் பகுதிகள்;

தருமபுரி மாவட்டம், குமாரசாமிபேட்டையில் 22 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம்; திருப்பூர் மாவட்டம், வாளவாடி – தெற்குபூதனம் சாலையில் பழையூரில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; ஈரோடு மாவட்டம், நாகர்பாளையம் சாலையில் 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தூத்துக்குடி மாவட்டம், புளியங்குடி – சங்கரன்கோவில்– கழுகுமலை– நாலாட்டின்புதூர் சாலையில் குமாரபுரத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; பாளையங்கோட்டை – குறுக்குச்சாலை– குளத்தூர் – பந்தல்குடி– அருப்புக்கோட்டை சாலையில் கொ. தளவாய்புரத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை – பாவூர்சத்திரம் சாலையில் சுரண்டையில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

என மொத்தம், 160 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் 7 ஆற்றுப்பாலங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்) திரு.ஏ.கே.இராஜதுரைவேல் பாண்டியன், தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) திரு. எம்.கே செல்வன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.7.2018**